# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## ஒருங்கிணைப்பு கலந்துரையாடல் கூட்டம்

## *15-8-2024* * உதகமண்டலம்

*15 ஆகஸ்ட் 2024 அன்று உதகையில் திரு ஆர் சுகுமாரன் எழுதிய மண்ணின் மைந்தர்கள் - பகுதி 7 புத்தக வெளியீடு விழாவில் கலந்து கொள்ள வந்த முக்கிமலை ஊரில் வாழும் சங்கத்தின் அங்கத்தினர்களும் கோவையில் இருந்து சென்ற சங்கத்தின் நிர்வாகிகளும் விழா முடிந்த பிறகு ஒருங்கிணைப்பு திட்டங்கள் பற்றியும், ஊரில் விசேஷங்கள் நடத்தும் செயல்பாடுகள் குறித்தும் விவரமாக விவாதித்தனர். கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.*

***முக்கிமலைவாழ் உறுப்பினர்கள்***

*கே சந்திரன் - தலைவர்*
*கே கே ராமன்*
*டி போஜன்*
*பி பீமன்*
*எல் பெள்ளி*
*ஜே நகுலன்*
*பி. சுந்தரம்*
*பி சத்தியசீலன்*
*ஆர் சுகுமாரன்*

***கோவை வாழ் உறுப்பினர்கள்***

*திரு ஜே சந்திரன் – தலைவர்*
*திரு கே அரசு - உப தலைவர்*
*திரு ஜே கணேஷ் – இணைப்பொருளாளர்*
*திரு கே ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்*
*திரு எம் என் ஜி மணி – புரவலர்*
*திரு என் சுகுமாரன் - புரவலர்*

*நீண்ட ஆலோசனைக்குப் பிறகு கீழே பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்கள் பட்டியலிடப்பட்டு இவற்றை 1-9-2024 அன்று கோயமுத்தூரில் நடைபெறக்கூடிய சங்கத்தின் நிர்வாக குழு கூட்டத்தில் சமர்ப்பித்து இறுதியான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. அந்த பரிந்துரைகள் கீழே பட்டியலிடப்பட்டிருக்கின்றன.*

1. *முக்கிமலையில் வாழ்பவர்களும் கோவையில் வாழ்பவர்களும் என்று மொத்தம் 48 குடும்பங்கள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கின்றனர் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.*

2. *சங்க உறுப்பினர்கள் குடும்பங்களில் நடைபெறும் விசேஷங்கள் முக்கிமலையிலும் நடைபெறலாம் மற்றும் கோவையிலும் நடைபெறலாம். ஊரில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அங்கத்தினர்கள் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே முன்னிலை வகிப்பார். அதேபோன்று கோவையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு சங்கத்தின் தலைவர் முன்னிலை வகிப்பார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.*

3. *முக்கிமலையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு திரு கே சந்திரன் கவுடர் அவர்கள் தலைமை தாங்குவார். திரு சந்திரன் கவுடர் அவர்கள் ஊரில் இல்லாத சமயங்களில் அவரது ஸ்தானத்தில் திரு கே கே ராமா கவுடர் அவர்கள் தலைமையேற்று நிகழ்வுகளை வழி நடத்துவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.*

4. *முக்கிமலை ஊரில் நடக்கும் திருவிழா மற்றும் கோயில் சம்பந்தப்பட்ட விசேஷங்களில் கோவை வாழ் அங்கத்தினர்களும் பெருவாரியாக கலந்து கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.*

5. *அசம்பாவித நிகழ்வுகள் முக்கிமலையில் நடக்கும் போது அதை மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட ஏற்பாடுகள் முன்னதாகவே செய்ய வேண்டும் என்றும் அதற்கு தேவையான நிதியை சங்கமே ஏற்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.*

   - *ஒரு லோடு விறகு (உபயோகப்படுத்திய பின் மீண்டும் இருப்பில் வைக்க வேண்டும்)*
   - *20 டயர்கள் (எந்த காலகட்டத்திலும் இருப்பில் இருக்க வேண்டும்)*
   - *ஈம சடங்குகளில் உபயோகப்படுத்தும் சீலை, சால்வை, பண்ண பட்டே, சின்னதா அண, தலை அக்கி கத்தி, ஓலை கத்தி, ஓலை மூக்குத்தி, ஓணக்கைதண்டு, பூக்காசு மற்றும் தேவைப்பட்ட பொருட்கள்*

6. முக்கிமலை ஊருக்கு பொதுவாக இருக்கும் சமையல் பாத்திரங்கள், அடுப்பு, சவ ஊர்தி, இருக்கைகள் முதலியவற்றை சங்க உறுப்பினர்கள் குடும்பங்களில் நடக்கும் நிகழ்வுகளிலும் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த பொருட்களையும் தாண்டி வேறு ஏதாவது அவசரகதியில் தேவைப்படும் பொழுது அவற்றை வாடகைக்கு எடுக்கலாம் என்ற தீர்மானமும் பரிந்துரைக்கப்பட்டது. அப்படிப்பட்ட செலவினங்களையும் சங்கம் ஏற்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

7. முக்கிமலை ஊரின் பெண் மற்றும் மருமகன் மரண நிகழ்வுகளுக்கு முக்கிமலை ஊரிலிருந்தும் கோவையில் இருந்தும் அங்கத்தினர்கள் நேரடியாக செல்ல வேண்டும் என்ற தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இத்துடன் அங்கத்தினர் மனைவியின் பெற்றோர்கள் ஈமச்சடங்குகளுக்கு செல்வதற்கு ஒரு வாகனத்திற்கான செலவினங்களை சங்கம் ஏற்கும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

8. முக்கிமலை அங்கத்தினர்கள் குடும்பங்களில் நடக்கும் மரண நிகழ்வுகள் செலவினங்களை சங்கம் ஏற்கும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேல் சகோதரர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அந்த நிகழ்வினால் ஏற்படும் செலவினங்களை சங்கம் அளிப்பது சாத்தியம் இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டது.

9. சங்கத்தில் மொத்தம் 48 குடும்பங்கள் அங்கத்தினர்களாக இருந்தாலும் முக்கிமலை ஊரின் அமைப்பில் கூட்டுக்குடும்பகளாக பார்க்கும் பொழுது மொத்தம் 30 என்று கணக்கிடலாம். முக்கிமலை கோவிலில் நடக்கும் பூஜைகளுக்கு வாரம் ரூபாய் 500 செலவு ஆகலாம் என்றும் அதற்கு சம்பந்தப்பட்ட குடும்பங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தொகையை கோவில் பூஜை பொறுப்பாளரிடம் அளிக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. இந்த அமைப்பில் ஒவ்வொரு குடும்பமும் வருடம் இருமுறை பூஜை செலவுகளை ஏற்கும்படியான தற்போதைய சூழ்நிலை இருப்பதையும் அங்கத்தினர்கள் நினைவு கூர்ந்தனர்.

10. ஊரில் மார்கழி பஜனை, கோவில் விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சங்கத்தின் அங்கத்தினர்கள் எப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யலாம் என்பதை வரும் கூட்டங்களில் விவாதிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

11. சங்கத்திற்காக நன்கொடைகள் பெறப்பட்டு கொண்டிருக்கின்றன என்றும் முதல் கட்டமாக 5 லட்சம் ரூபாய் வைப்பு நிதியாக வங்கியில் உள்ளது என்ற

தகவலையும் அங்கத்தினர்கள் விவாதித்தனர். மேலும் 5 லட்சம் கூடிய விரைவில் வைப்பு நிதியில் சேர்க்கப்படும் என்ற தகவலும் தெரிவிக்கப்பட்டது. அங்கத்தினர்களை தொடர்புகொண்டு நன்கொடைகளை அதிகப்படுத்தியும் மற்றும் துரிதமாக அவற்றை பெரும் முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்று பரிந்துரைக்கப்பட்டது. ரூபாய் 15 லட்சம் வைப்பு நிதியில் சேரும் வரை சங்கத்தில் ஏற்படும் செலவினங்களை அங்கத்தினர்களே நன்கொடை மூலமாகவும் தங்கள் பங்களிப்பு என்ற முறையிலும் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

12. மண்ணின் மைந்தர்கள் - ஏழாம் பகுதி புத்தக வெளியீட்டு விழாவில் நாக்குபெட்டா தலைவர், உதகை எம் எல் ஏ திரு கணேசன், பிரபல உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு பொப்ளி, பல சீமை தலைவர்கள், விருந்தினர்கள் என்று சுமார் 100 பேர் கலந்துகொண்டு திரு சுகுமாரன் ஆராய்ச்சிகள் பற்றி பேசியது முக்கிமலை ஊரின் குடிமகன் என்ற விதத்தில் முக்கிமலைக்கு பெருமை சேர்ப்பதாக இருந்த தருணங்களை அந்த விழாவில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் உணர முடிந்தது. திரு சுகுமாரனுக்கு பாராட்டுதல்களை தெரிவித்த அங்கத்தினர்கள் சங்க சார்பில் வரும் நிகழ்வுகளில் அவரை கௌரவிக்கவும் பரிந்துரை செய்தனர்.

*********